ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.1 – சிலையிலங்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.1 – சிலையிலங்கு

‡ சிலை இலங்கு பொன் ஆழி ⋆
திண் படை தண்டொண் சங்கம் என்கின்றாளால் ⋆
மலை இலங்கு தோள் நான்கே ⋆
மற்றவனுக்கெற்றே காண் ! என்கின்றாளால் ⋆
முலை இலங்கு பூம் பயலை ⋆
முன்போட அன்போடி இருக்கின்றாளால் ⋆
கலை இலங்கு மொழியாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ || **8.1.1** ||

‡ செருவரை முன் ஆசறுத்த ⋆
சிலை அன்றோ கைத்தலத்ததென்கின்றாளால் ⋆
பொரு வரைமுன் போர் தொலைத்த ⋆
பொன் ஆழி மற்றொரு கை என்கின்றாளால் ⋆
ஒருவரையும் நின் ஒப்பார் ⋆
ஒப்பிலா என்னப்பா ! என்கின்றாளால் ⋆
கருவரை போல் நின்றானைக் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ || **8.1.2** ||

துன்னு மா மணி முடி மேல் ⋆
துழாய் அலங்கல் தோன்றுமால் என்கின்றாளால் ⋆
மின்னு மா மணி மகர குண்டலங்கள் ⋆
வில் வீசும் என்கின்றாளால் ⋆
பொன்னின் மா மணி ஆரம் ⋆

அணி ஆகத்திலங்குமால் என்கின்றாளால் ⋆
கன்னி மா மதிள் புடை சூழ் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.3** ॥

தார் ஆய தண் துளப ⋆
வண்டுழுத வரை மார்பன் என்கின்றாளால் ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த ⋆
புட்பாகன் என் அம்மான் என்கின்றாளால் ⋆
ஆரானும் காண்மின்கள் ⋆
அம் பவளம் வாய் அவனுக்கென்கின்றாளால் ⋆
கார்வானம் நின்ற திரும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.4** ॥

அடித்தலமும் தாமரையே ⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால் ⋆
முடித்தலமும் பொற்பூணும் ⋆
என் நெஞ்சத்துள் அகலா என்கின்றாளால் ⋆
வடித்தடங்கண் மலரவளோ ⋆
வரை ஆகத்துள்ளிருப்பாள் என்கின்றாளால் ⋆
கடிக்கமலம் கள் உகுக்கும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.5** ॥

பேர் ஆயிரம் உடைய பேராளன் ⋆
பேராளன் என்கின்றாளால் ⋆
ஏர் ஆர் கன மகர குண்டலத்தன் ⋆
எண் தோளன் என்கின்றாளால் ⋆
நீர் ஆர் மழை முகிலே ⋆
நீள் வரையே ஒக்குமால் என்கின்றாளால் ⋆

கார் ஆர் வயல் அமரும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.6** ॥

செவ் அரத்த உடை ஆடை ⋆
அதன் மேல் ஓர் சிவளிகைக் கச்சென்கின்றாளால் ⋆
அவ் அரத்த அடி இணையும் ⋆
அங்கைகளும் பங்கயமே என்கின்றாளால் ⋆
மை வளர்க்கும் மணி உருவம் ⋆
மரகதமோ மழை முகிலோ ! என்கின்றாளால் ⋆
கை வளர்க்கும் அழலாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.7** ॥

கொற்றப் புள் ஒன்றேறி மன்றூடே ⋆
வருகின்றான் என்கின்றாளால் ⋆
வெற்றிப் போர் இந்திரற்கும் ⋆
இந்திரனே ஒக்குமால் என்கின்றாளால் ⋆
பெற்றக்கால் அவனாகம் ⋆
பெண் பிறந்தோம் உய்யோமோ என்கின்றாளால் ⋆
கற்ற நூல் மறையாளர் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.8** ॥

வண்டமரும் வனமாலை ⋆
மணி முடி மேல் மண நாறும் என்கின்றாளால் ⋆
உண்டிவர் பால் அன்பெனக்கென்று ⋆
ஒருகாலும் பிரிகிலேன் என்கின்றாளால் ⋆
பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் ⋆
யாம் என்றே பயில்கின்றாளால் ⋆

கண்டவர் தம் மனம் வழங்கும் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ ॥ **8.1.9** ॥

‡ மா வளரும் மென் நோக்கி ⋆
மாதராள் மாயவனைக் கண்டாள் என்று ⋆
கா வளரும் கடி பொழில் சூழ் ⋆
கண்ணபுரத்தம்மானைக் கலியன் சொன்ன ⋆
பா வளரும் தமிழ் மாலை ⋆
பன்னிய நூல் இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் ⋆
பூ வளரும் கற்பகம் சேர் ⋆
பொன் உலகில் மன்னவர் ஆய்ப் புகழ் தக்கோரே ॥ **8.1.10** ॥

அடிவரவு — சிலை செருவரை துன்னு தார் அடி பேர் செவ்வரத்த கொற்றம் வண்டு மாவளரும் தெள்ளியீர்

சிலையிலங்கு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்